## காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 25ஆம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 10ம் நாள், 2018, திங்கள் கிழமை**

**இன்றைய குறள்**

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

( குறள் எண் : 18 )

**விளக்கம்**

மழை பொய்த்துப் போனால் தெய்வத்திற்குத் தினமும் நடக்கும் பூசையும் நடக்காது; ஆண்டுதோறும் கொண்டாடப்படும் திருவிழாவும் நடைபெறாது.

**பொன் மொழி**

ஒழுக்கம் உண்டாக்காத கல்வியால் எந்தவித பயனும் இல்லை.

காந்திஜி

**இரண்டொழுக்கப் பண்பாடு**

1. நான் பயிலும் பள்ளியினையும், வகுப்பறையினையும் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்வேன்.
2. எல்லோரையும் மதித்து நடப்பேன்

**பழமொழி**

A good reputation is a fair estate

நற்குணமே சிறந்த சொத்து

**பொது அறிவு**

1. மின்சாரம் மூலம் வெல்டிங் முறையை கண்டறிந்தவர் - தாம்சன்
2. பால்பாயிண்ட் பேனாவை கண்டறிந்தவர் - ஜான்டிலோடு

# இன்றைய முக்கிய செய்திகள்

- அடுத்தாண்டு நடக்கஉள்ள லோக்சபா தேர்தலுக்காக, 'யாராலும் வெல்ல முடியாத இந்தியா – என்ற புதிய கோஷத்தை, பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.
- பெட்ரோல் விலை உயர்வைக் கண்டித்து எதிர்கட்சிகள் இன்று நாடு முழுவதும் பந்த்.
- பெட்ரோல் மீதான வாட் வரியை குறைத்தது ராஜஸ்தான் அரசு
- ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் திறப்பில்லை : அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்
- மதுரை, தேனி மாவட்டங்களில் இன்று அதிகாலையில் பரவலாக மழை பெய்தது. வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டத்தில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் மதுரையில் இன்று அதிகாலையில் பரவலாக மழை பெய்தது. மேலும் மாவட்டத்தின் பிறபகுதிகளில் நேற்று இரவில் மழை பெய்தது.
- இராஜிவ்காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளாக சிறையில் உள்ள 7 குற்றவாளிகளை விடுதலை செய்திட தமிழக அரசு பரிந்துரை.
- தமிழ்நாடு முழுவதும் புதிய வாக்காளர் சேர்க்கை நேற்று நடைபெற்றது.